# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No. 163/2019**

Deposition of Witness : PW-2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரெங்கநாதன் | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 07-01-2025

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திருமதி. வனிதா, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>– தொடங்கப்பட்ட நேரம் : 11.50 மு.ப.

நான் இம்மனுவின் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் தற்சமயம் மதுரை மருத்துவ கல்லூரி மூளை அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியாராக பணிபுரிகிறேன். நான் மே மாதம் 2024 ம் வருடம் MCOP மெடிக்கல் போர்டில் நரம்பியல் குறைபாட்டிற்கு உண்டான Disability access செய்து மணிவண்ணன், 29 வயது MCOP 163/2019 என்பவருக்கு நரம்பியல் குறைபாடு 43 விழுக்காடு என்று சான்று வழங்கினேன். நான் மனுதாரருக்கு வழங்கிய ஊனச்சான்றிதழில் கண் குறைபாடு சம்மந்தமாக 10 விழுக்காடு என கருத்துரை வழங்கி ஒட்டு உறுப்பு அறுவை சிகிச்சை பின்னிட்டு 8 விழுக்காடு என குறைபாடு குறித்து சான்று வழங்கினேன். மொத்த ஊனகுறைபாடு 53 சதவீதம் என கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஊனச்சான்று **சா.சா.ஆ.1** ஆகும். மருத்துவராகிய நான் என் முன்னிலையில் இருக்கும் நோயாளியின் நோய் தன்மை மற்றும் அவருக்கு ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக உள்ள குறைபாடு குறித்து மருத்துவ முறையில் பரிசீலனை செய்யப்படவேண்டிய விதிமுறைகளுக்கு உட்பட்டு குழுமம் ஊனச்சான்று வழங்கியுள்ளது. குழுமத்தில்

அவர் ஆஜராகியிருந்தபோது துணையோடு தான் வந்தார். அவர் தனியாக தன்னிச்சையாக செயல்படகூடிய அளவில் அவரின் மனநிலை மற்றும் உடல் நிலை இல்லை.

1ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினர்

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

விபத்தினால் பாதிக்கப்பட்ட மனுதாரர் மணிவண்ணன் எங்களுடைய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாரா என்றால் அனுமதிக்கப்படவில்லை சிகிச்சை எதுவும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. ஊனச்சான்று சம்மந்தமாக மே மாதம் 2024 எங்களிடம் பெற்றுக்கொண்டார். நான் மனுதாரருக்கு குழுமம் வழங்கிய ஊனச்சான்றிதழில் நரம்பியல் சம்மந்தப்பட்ட துறைக்காக மட்டும் தான் ஆய்வு செய்து ஊன சதவீதம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஊன்சான்றிதழில் என்னுடன் சேர்ந்து இரண்டு மருத்துவர்கள் கையெழுத்து செய்துள்ளதால் மேற்படி ஊனச்சான்றிதழை நிறுவனம் செய்ய என்னால் மட்டும் இயலாது என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 12.18 பி.ப.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

Digitally signed by G N SARAVANAKUMAR
Date: 2025.01.07 19:34:43 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 07-01-2025